# National Diploma In English

## ජාතික ඉංග්‍රීසි ඩිප්ලෝමා පාඨමාලාව

## தேசிய ஆங்கில டிப்ளோமா

# 8

**Psalm Institute of Engineering and Technology**
A Division of Psalms Technologies (Pvt) Ltd,
22-1/4, Galle Road, Dehiwala.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# National Diploma in English
# தேசிய ஆங்கில டிப்ளோமா பயிற்சிநெறி

## ஆமையும் முயலும்.

கூரம்பாயினும் வீரம் பேசேல், முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் போன்றவற்றை விளக்குவதாகவே நாம் சிறுவயதில் படித்த ஆமையும் முயலும் கதை அமைகின்றது. வேகமாக ஓடக்கூடிய ஒரு முயல் சாதாரணமாக நகர்ந்து செல்லும் ஒரு ஆமையிடம் எவ்வாறு தோற்றுப்போகின்றது என்பது இந்த கதையின் சுருக்கம். அல்லது சாதாரணமாக நகர்ந்து செல்லும் ஒரு ஆமை வேகமாக ஓடும் ஒரு முயலை எவ்வாறு வெல்கிறது என்றும் சொல்லலாம். இது சாதாரண கதை மட்டுமல்ல. வாழ்க்கையின் மிக பெரிய பாடம்.

பல சந்தர்ப்பங்களில் நாம் செய்கின்றதான காரியங்களில் எங்களுடைய திறமைகளுக்கே முதலிடம் கொடுக்கின்றோம். இடைவிடா முயற்சியை விட்டுவிடுகிறோம். சோர்வுகளுக்கு இடம் கொடுத்து விடுகிறோம். இயலுமான காரியங்களை இயலாத காரியமாக்கிவிடுகிறோம். திறமையானவர்கள் திறமையில்லாதவர்கள் ஆகி விடுகிறோம்.

வளர்ந்தவர்களாகிய எங்களுக்கும் இந்த கதை தரும் பாடம் எப்போதும் தேவையானதே. நாம் செய்ய உள்ளதான காரியம் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அந்த ஆமையை போன்று சோர்வின்றி இடைவிடாது செய்து வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கை. நாம் செய்கின்ற காரியம் மிக இலகுவாக தெரிந்தாலும் அந்த முயலைப்போன்று நாம் சோர்வுகளுக்கு இடம்கொடுத்தோமானால் இயலுமான காரியமும் இயலாத காரியமாக மாறி விடும் என்ற எச்சரிக்கை.

ஆங்கிலம் கற்பதும் கதைப்பதும் இலகுவான காரியமா, கடினமான காரியமா, என்று யோசிக்காமல் சோர்வின்றி பயிற்சிகளை தொடர்ந்து செய்யுங்கள் வெற்றி உங்கள் பக்கமே.

J. Chandrasegarar
Director
Plalm Institute of Engineering and Technology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசன விருத்தியாக்கம் (தொடர்ச்சி)

நாம் கற்ற அடிப்படை வசனங்களை விருத்தி செய்து பெரிய வசனங்களை உருவாக்குவதற்காக பயன்படும் ஒரு குறிப்பிட்ட வகையான சொற்களையும் அவற்றின் பயன்பாட்டினையும் பயன்படுத்தும் முறைகளையும் இந்தப்பாடத்தில் பார்க்கலாம். படித்து முடித்ததும் பின்னே உள்ள ஒவ்வொரு பயிற்சியையும் தவறாமல் செய்து அனுப்பவும்

நாங்கள் திரையரங்கின் பின்பக்கத்தில் நின்றோம்
பின்பக்கம் : back திரையரங்கு: theater
பின்பக்கத்தில் : **at** the back திரையரங்கின் : **of** the theater
We stood **at the back** ***of the theater.***

நாங்கள் மலையின் உச்சியை மூன்று மணிக்கு அடைந்தோம்
உச்சி : top மலை : hill மூன்று மணி : three o'clock
மலையின் உச்சி : the top **of** the hill மூன்று மணிக்கு : **at** three o'clock
We reached **the top of the hill** ***at three o'clock***

அந்தக்கடை திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமைவரை திறந்திருக்கிறது
திங்கட்கிழமை : Monday வெள்ளிக்கிழமை : Friday
திங்கட்கிழமையிலிருந்து : **from** Monday வெள்ளிக்கிழமைவரை : **to** Friday
The shop is open **from Monday** ***to Friday.***

அவன் அவனுடைய சகோதரனைப்போல காணப்படுகிறான்
அவனுடைய சகோதரன் : his brother
அவனுடைய சகோதரனைப்போல : **like** his brother
He looks **like his brother.**

அவன் ஒரு திருப்புளியை கொண்டு பெட்டியை திறந்தான்
ஒரு திருப்புளி : a screwdriver.
ஒரு திருப்புளியை கொண்டு : **with** a screwdriver.
He opened the box **with a screwdriver.**

அவன் ஏறுவதற்கு முடிவெடுத்தான்
ஏறு : climb
ஏறுவதற்கு : **to** climb
He decided **to climb**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த படகு பாலத்திற்கு கீழாக போய்க்கொண்டு இருந்தது
பாலம் : bridge
பாலத்திற்கு கீழாக : **under** the bridge
The boat was going **under the bridge.**

தண்ணீர் ஆவியாக மாறுகிறது
ஆவி : steam
ஆவியாக : **into** steam
The water changes **into steam.**

அந்த அணில் சுவரின் வழியே ஓடியது
சுவர் : wall
சுவரின் வழியே : **along** the wall
The squirrel ran **along the wall.**

இரண்டு நாட்களாக நாங்கள் அங்கே இருப்போம்
இரண்டு நாட்கள் : two days
இரண்டு நாட்களாக : **for** two days
We will be there **for two days.**

அவர்கள் கார்த்திகை மாதத்தில் வந்துகொண்டு இருப்பார்கள்
கார்த்திகை மாதம் : Novmber
கார்த்திகை மாதத்தில் : **in** Novmber
They will be coming **in November.**

பால் மற்றும் பல உணவுகள் கல்சியத்தை கொண்டிருக்கின்றன
பால் : milk
பால் மற்றும் : **besides** milk ( besides - மேலும், தவிர, அதுபோன்று)
Many foods **besides milk** contain calcium.

வெள்ளிக்கிழமையிலிருந்து அவன் இங்கு இருந்து இருக்கிறான்
வெள்ளிக்கிழமை : Friday
வெள்ளிக்கிழமையிலிருந்து : **Since** Friday
He has been here **since Friday.**

அங்கே இலைகளுக்கிடையே பழங்கள் இருக்கின்றன
இலைகள் : leaves
இலைகளுக்கிடையே : **among** the leaves
There are fruits **among the leaves**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவளை சென்றவருடத்தில் இருந்து தெரிந்திருக்கிறேன்
சென்ற வருடம் : last year
சென்ற வருடத்திலிருந்து : since last year
I have known her **since last year.**

அந்த பூனை அடுப்புக்கு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு இருந்தது
அடுப்பு : stove
அடுப்புக்கு பக்கத்தில் : beside the stove ( beside not besides )
The cat was sitting **beside the stove.**

நாங்கள் பதினைந்து நிமிடங்களாக காத்தோம்
பதினைந்து நிமிடங்கள் : fifteen minutes
பதினைந்து நிமிடங்களாக : for fifteen minutes
We waited **for fifteen minutes.**

நாங்கள் எதற்காகவும் தயாராக இருக்கிறோம்
ஏதாவது : anything
எதற்காகவும் : for anything
We are ready **for anything.**

நான் அவளைப்பற்றி ஆவலாக இருந்தேன்
அவளை : her
அவளைப்பற்றி : about her
I was anxious **about her.**

அவள் அவனுடைய சாதனைகளுக்காக புகழ்ந்தாள்
அவனுடைய சாதனைகள் : his achievments
அவனுடைய சாதனைகளுக்காக : for his achievments
She praised **for his achievements.**

நாங்கள் எங்கள் நாட்டில் பெருமையாய் இருக்கிறோம்
எங்கள் நாடு : our contry
எங்கள் நாட்டில் : of our contry ( எங்கள் நாட்டைக்குறித்து )
We are proud **of our country**

நான் என்னுடைய பெறுபேறுகளைக்கொண்டு சந்தோசமாய் இருக்கிறேன்
என்னுடைய பெறுபேறுகள் : my results
என்னுடைய பெறுபேறுகளைக்கொண்டு : with my results ( பெறுபேறுகளில் )
I am happy **with my results.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் அந்த ஒழுங்குகளைகொண்டு சந்தோசமாய் இருக்கிறோம்
ஒழுங்குகள் : arrangements
ஒழுங்குகளைகொண்டு : **with** the arrangements
We are satisfied **with the arrangements.**

அவன் அந்த வேலைக்காக தகுதிஉள்ளவனாய் இருக்கிறான்
வேலை : job
வேலைக்காக : **for** the job (வேலைக்கு)
He is qualified **for the job.**

வெப்பமும் ஒளியும் சூரியனில் இருந்து வருகிறது
சூரியன் : sun
சூரியனில் இருந்து : **from** the sun
Heat and light come **from the sun.**

அவள் விளையாட்டுகளில் பங்குகொள்வதற்கு விரும்புகிறாள்
பங்குகொள்ளு : participate விளையாட்டுகள் : games
பங்குகொள்ளுவதற்கு : to participate விளையாட்டுகளில் : **in** games
She likes **to participate** ***in games.***

அவன் நான்கு சஞ்சிகைகளுக்கு சந்தாசெய்கிறான்
நான்கு சஞ்சிகை : four magazines
நான்கு சஞ்சிகைகளுக்கு : **to** four magazines
He subscribes **to four magazines.**

தயவுசெய்து புகைத்தலில் இருந்து விலகு
புகைத்தல் : smoking
புகைத்தலில் இருந்து : **from** smoking
Please refrain **from smoking.**

நீங்கள் என்னுடைய முடிவுகளோடு ஒத்துப்போகிறீர்களா?
என்னுடைய முடிவுகள் : my conclusions
என்னுடைய முடிவுகளோடு : **with** my conclusions
Do you agree **with my conclusions?**

நாங்கள் எங்கள் வரவின்மைக்காக மன்னிப்புக்கேட்டோம்
எங்கள் வரவின்மை : our absence
எங்கள் வரவின்மைக்காக : **for** our absence
We apologized **for our absence.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஒரு வியாபாரத்தை தொடங்குதலில் வேலைசெய்பவனாய் இருக்கிறான்
வியாபாரத்தை தொடங்குதல் : starting a business
வியாபாரத்தை தொடங்குதலில் : in starting a business
He is engaged **in starting a business.**

நாங்கள் நகர பேருந்தின் மேல் நம்பியிருக்கிறோம்
நகர பேருந்து : city bus
நகர பேருந்தின் மேல் : on the city bus
We rely **on the city bus.**

நாங்கள் வரவேற்பிடத்திற்கு போவோம்
வரவேற்பிடம் : reception
வரவேற்பிடத்திற்கு : to the reception
She will go **to the reception.**

அங்கே வாசலின் முன்பாக ஒரு கார் இருக்கிறது
வாசல் : gate
வாசலின் முன்பாக : in front of the gate
There is a car **in front of the gate.**

நீங்கள் அந்த குழந்தைக்காக ஒரு பெயரில் முடிவெடுத்து விட்டீர்களா?
குழந்தை : baby
ஒரு பெயர் : a name
குழந்தைக்காக : for the baby
ஒரு பெயரில் : on a name
Have you decided **on a name** ***for the baby***?

நான் ஐந்தாவது வயதில் ஆங்கிலம் கற்றேன்
ஐந்து : five
வயது : age
ஐந்தாவது : of five
வயதில் : at the age
I learnt English **at the age** ***of five.***

நான் சண்டை இல்லாத படங்களை விரும்புகிறேன்
சண்டை : fight
சண்டையில்லாத : without fight
I like movies **without fight**

பஸ் சாரதிகள் வேலை நிறுத்தத்தில் இருக்கிறார்கள்.
வேலை நிறுத்தம் : strike
வேலை நிறுத்தத்தில் : on strike
Bus drivers are **on strike**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியில் ஒரு நல்ல படம் இருக்கிறது.
தொலைக்காட்சி : television
தொலைக்காட்சியில : on television
There is a good movie **on television**

வீதியில் அதிகமாக கார்கள் இருந்தன.
வீதி : road
வீதியில் : on the road
There were many cars **on the road**

நான் இரவில் தூங்க முடியவில்லை
இரவு : night
இரவில் : at night
I can't sleep **at night**

சந்தையில் விற்பனையில் ஏதாவது இருக்கிறதா?
சந்தை : market விற்பனை : sale
சந்தையில் : at the market விற்பனையில் : on sale
Is there anything **on sale** ***at the market***?

விடுமுறையில் நீ எங்கே போவதற்கு விரும்புகிறாய்?
போ : go விடுமுறை : vacation
போவதற்கு : to go விடுமுறையில் : on vacation
Where would you like **to go** ***on vacation***?

நான் இந்த ஓவியத்துக்காக டொலரில் பணம் செலுத்த முடியுமா?
ஓவியம் : painting டொலர் : dollars
ஓவியத்துக்காக : for this painting டொலரில் : in dollars
Can I pay **for this painting** ***in dollars***?

இது உன்னுடைய இடப்பக்கத்தில் இருக்கிறது.
உன்னுடைய இடப்பக்கம் : your left.
உன்னுடைய இடப்பக்கத்தில் : on your left.
It's **on your left.**

நான் ஒரு விடுதியில் தங்கினேன்
ஒரு விடுதி : a hotel.
ஒரு விடுதியில் : at a hotel.
I stayed **at a hotel.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோஒருவர் கதவில் தட்டிக்கொண்டு இருக்கிறார்
கதவு : door.
கதவில் : at the door.
Someone is knocking **at the door.**

நீ உன்னுடைய செயற்பாட்டில் வேலைசெய்துகொண்டு இருக்கிறாயா?
உன்னுடைய செயற்பாடு : your project
உன்னுடைய செயற்பாட்டில் : on your project
Are you working **on your project?**

இந்த கேள்விகளுக்கு விடையை கண்டுபிடி
இந்த கேள்விகள் : these questions
இந்த கேள்விகளுக்கு : to these questions
Find answers **to these questions**

உலகில் நிறைய மொழிகள் உள்ளன.
உலகம் : world.
உலகில் : in the world.
There are many languages **in the world.**

நான் பாடசாலையிலிருந்து பி.ப 4.00 மணிக்கு திரும்பினேன்
பி.ப. 4.00 மணிக்கு : at 4:00 pm
I left school **at 4:00 pm**

நான் இரவில் தொலைக்காட்சி பார்ப்பதற்கு விரும்புகிறேன்.
இரவு : night. பார் : watch
இரவில் : at night. பார்ப்பதற்கு : to watch
I like **to watch** TV ***at night.***

நான் 12 பிரதான வீதியில் வசிப்பது வழக்கம்.
12 பிரதான வீதியில் : at 12 Main Street.
I used to live **at 12 Main Street.**

நான் 1966 இல் பிறந்தேன்
1966 இல் : in 1966
I was born **in 1966**

நான் இருநூறுருபாய்க்கு சட்டை(சேட்) வாங்கினேன்.
இருநூறு ருபாய் : 200 Rupees.
இருநூறு ருபாய்க்கு : for 200 Rupees.
I bought the shirt **for 200 Rupees.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி 1

**கீழே உள்ள வசனங்களை எழுதி தமிழ் அர்த்தங்களையும் மாற்றி எழுதுக**

1. I'll be working **till** 7 o' clock
2. I'll see you **in** two weeks
3. I'll see you **on** Monday
4. I'll see you **in** the morning.
5. I took your Shirt **by** mistake
6. I like walking **at** night.
7. I went **to** bed **at** midnight
8. I bought a new dress **at** the store
9. I haven't seen you **since** Christmas.
10. I did my homework **in** the evening
11. I saw Malini **on** Tuesday
12. I'll be back **in** half an hour.
13. I met him **on** the corner.
14. I saw him **in** the evening
15. I don't feel sorry **for** her
16. I live **in** an apartment building.
17. I live **on** the top floor.
18. I am **at** home
19. I put the towel **in** the bathroom
20. I'm going **to** America **in** April
21. I need to study **at** home
22. I have worked **at** the bank **for** two years
23. I usually go to school **by** bus.
24. I found my car key **in** my pocket
25. I'm upset **about** my health
26. I've been waiting **for** an hour.
27. We were **at** the party **at** midnight
28. We arrived **at** 5 o' clock **in** the morning.
29. We moved the bookcase **from** the bedroom **to** the studyroom
30. Where should we go **for** a drink?
31. We live **at** this address
32. We are leaving **for** Paris next Saturday.
33. We have to leave **in** five minutes.
34. We went **on** a trip to Rome
35. We took a taxi **to** the airport.
36. We went **to** Kandy **on** vacation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. We take a trip **in** the summer.
38. We had to fight **for** our freedom
39. Would you like **to** come **for** a walk **with** me?
40. Shall we go **for** a walk?
41. Did you stay **with** friends?
42. What do you do **in** the evenings?
43. You may write **in** ink
44. Did you see Jack **by** chance?
45. Are you afraid **of** him?
46. Have you found a nice gift **for** her?
47. Are you good **at** cricket?
48. Can we go **to** the cinema **on** Friday night?
49. Did you see my picture **in** the magazine?
50. Why are you laughing **at** me?
51. How long were you **on** the phone?
52. You can go there **by** bus or **on** foot.
53. Do you drink tea **with** milk?
54. The train leaves **in** five minutes
55. He's standing **by** the window.
56. The course begins **on** 7 January and ends **on** 10 March
57. I read it **in** a day.
58. The headline is **at** the top **of** the page
59. Come **at** 10 **on** Monday morning.
60. Water boils **at** 100 centigrade.
61. What did you have **for** lunch?
62. The doctor will come **within** one hour.
63. They plan **to** arrive **in** Paris **on** July 4th.
64. Ananth died **in** 1987 **at** the age of 81.
65. Anitha works **during** the week
66. That book was written **by** Ananth.
67. That apartment was **in** the basement.
68. Do you like to travel **by** plane?
69. He fell **off** a ladder.
70. He has lived **in** India **for** two years
71. Is he **with** you?
72. He came **to** the decision
73. He doesn't work **on** Sundays or Mondays.
74. He works hard **at** the week, and relaxes **at** week-ends
75. He lives **in** Australia.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. He lives **in** apartment 3
77. He's probably **at** work now.
78. He travelled **on** business
79. He will meet me **at** 8 o'clock
80. He smiled **at** me
81. I'm angry **with** him **for** telling lies **about** me
82. He drives **at** very high speeds
83. He left his keys **in** the door.
84. They were working **in** the garden **from** 3 o'clock **to** seven o'clock
85. I like **to** travel **in** the winter.
86. Sutha was driving **at** 90 kilometers per hour.
87. Turn right **at** the traffic light
88. We've to go **in** five minutes
89. The doctor will see you **at** 10:00
90. Raja is sitting **beside** his brother.
91. Raja is **in** the hospital **with** serious injuries.
92. My friends want a house **with** a big garden
93. My friends are waiting **for** me **at** the market
94. My father gave me a present **on** my birthday.
95. My pen is **in** my pencil case
96. My apartment is **on** the fifth floor.
97. Don't wait **for** me.
98. My house is **by** the sea
99. Some animals sleep during the day
100. This train travels **from** Colombo **to** Varuniya.
101. Twenty people applied **for** the job
102. Do you have any proof **of** that?
103. The dog barked **at** the mailman.
104. I will work **until** five o'clock.
105. I will arrive **at** six o'clock
106. I received no reply **to** my letter.
107. I went **to** work **without** my umbrella
108. I took my hat **off** the table
109. We expect them **on** Wednesday.
110. You had told **about** it
111. The store is located **on** North Street.
112. The book was written **by** a doctor.
113. The children ran **out of** the school.
114. They sent **on** time



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. He paid **for** the meal
116. They have moved **to** a new location.
117. She is leaving **in** five minutes.
118. She went **to** Jaffna **via** Varuniya.
119. She will fly **to** London.
120. His birthday is **on** the 8th **of** January.

## பயிற்சி 2

கீழேயுள்ள தமிழ் வசனங்களை ஆங்கிலத்தில் எழுதுக

1. அவன் வீட்டுக்கு பின்பக்கத்தில் தூங்கிக்கொண்டிருக்கிறான்.
2. அவர்கள் எங்கேயாவது வேலை செய்து கொண்டிருப்பார்கள்
3. அவள் யாருக்காகவோ காத்துக் கொண்டிருக்கிறாள்
4. நீ நேற்றே உடை வாங்கியிருப்பாய்
5. அவள் அவருடைய சகோதரியுடன் கொழும்பிற்கு போய்விட்டாள்.
6. அவள் நேற்று ஒரு அழகான சட்டை வாங்கியிருந்தாள்.
7. அவளால் பரீட்சை வினாத்தாள் தயார் செய்ய முடியுமா?
8. அவளால் வினாத்தாள் திருத்த மட்டுமே முடியும்.
9. நீ ரவியைப் பற்றி கவலைப்படலாமா?
10. அவள் ரவியைப் பற்றி கவலையில் இருக்கக் கூடும்.
11. அவளால் போன வாரம் பயிற்சிகளை செய்திருக்க முடியவில்லை.
12. பானு நடந்தா பாடசாலை போக வேண்டும்?
13. அவள் அவளது தந்தையுடன் சைக்கிளில் போகலாம்.
14. பானு தினமும் அவளது சகோதரியுடன் பாடசாலை போவது வழக்கம்.
15. சாந்தி நாளை வைத்தியரை சந்திக்க வேண்டி இருக்கிறது.
16. சாந்தி நாளை விடியற்காலை எழும்ப வேண்டி இருக்கும்.
17. பிரியா ஏன் இன்னும் வரவில்லை?
18. அவள் சாந்தியை சந்திக்க வேண்டி இருந்தது
19. கமலா இப்பொழுது நன்றாக சாப்பிட இயலுமாய் இருக்கிறது.
20. குமுதாவிற்கு முன்னர் நன்றாக பாட இயலுமாய் இருந்தது.
21. கலா மிக நன்றாக கார் ஓட்டுகிறாள்.
22. சசி கடைசியாக கடந்த வாரம் வருப்பிற்கு வந்தான்.
23. அவள் அடுத்த வாரம் சரளமாக ஆங்கிலம் கதைப்பாள்.
24. நீங்கள் ஏன் அங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்.
25. நீங்கள் நேற்று அந்த வழியாக எங்கே போய்க் கொண்டிருந்தீர்கள்?
26. நீங்கள் நேற்று இந்த நேரம் வீட்டிற்கு போய்விட்டீர்களா?
27. நேற்று இந்த நேரம் பேருந்தில் போய்க்கொண்டிருக்கிறோம்.
28. நீங்கள் தெகிவளையிலுள்ள மிருகக்காட்சி சாலைக்கு போய் இருக்கிறீர்களா?
29. நீங்கள் நாளை மறுதினம் இவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.
30. நீங்கள் போனவாரம் பயிற்சிகளை அனுப்பி இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. அவர்கள் நேற்றே போயிருக்கக் கூடும்
32. அவள் அடுத்தவாரம் யாழ்ப்பாணம் அல்லது வன்னிக்கு போக வேண்டும்.
33. நீங்கள் நாளை போட்டியில் கலந்து கொள்ள வேண்டி இருக்கிறது.
34. அவர்கள் அங்கே தங்க வேண்டி இருக்கும்.
35. நீங்கள் இப்பொழுது நீந்த இயலுமாய் இருக்கிறதா?
36. அவன் மூன்றாவது பயிற்சியை செய்ய இயலுமாய் இருந்ததா?
37. அவள் அவனுக்காக காத்திருக்க இயலுமாய் இருந்ததா?
38. நீங்கள் சென்ற பிறந்தநாளுக்கு நண்பர்களுக்கு விருந்து கொடுத்தீர்களா?
39. அவர்கள் அடுத்த மாதம் சுற்றுலா போகிறார்கள்
40. நாங்கள் இப்பொழுது விளையாடிக்கொண்டிருக்கிறோம்.
41. அவன் நேற்று வேலைசெய்து கொண்டிருந்தான்
42. நாங்கள் நாளை யாழ்ப்பாணம் போய்க்கொண்டிருப்போம்.
43. நாங்கள் ஏற்கனவே அதை பார்த்து இருக்கிறோம்.
44. நீ நேற்று காலை எங்களுக்கு போன் செய்தாயா?
45. எங்களால் பேருந்து ஓட்டவும் முடியும்.
46. அவர்கள் நேற்று யாழ்ப்பாணம் போய் இருக்கிறார்கள்.
47. நீங்கள் எப்போது கொழும்பிலிருந்து வந்தீர்கள்.
48. அவர்கள் நாளை அல்லது அடுத்தவாரம் பயிற்சிகளை அனுப்ப கூடும்.
49. நாங்கள் அடுத்த வருடம் வீட்டுவேலை தொடங்கலாம்.
50. நாங்கள் போன கிழமை வேலை செய்து முடிந்தோம்
51. நீங்கள் ஒரு கிழமைக்குள் எல்லா பயிற்சிகளையும் அனுப்ப வேண்டும்.
52. நீங்கள் எங்களுடைய புத்தகங்களை அனுப்ப வேண்டியதில்லை.
53. நாங்கள் எங்களுடைய நண்பர்களுடன் போவது வழக்கம்.
54. நாங்கள் இவைகளை குறித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.
55. நாங்கள் சிறிது நேரம் ஓய்வெடுக்க வேண்டி இருந்தது,
56. நாளை நாங்கள் நிறைய வேலை செய்ய வேண்டி இருக்கும்.
57. நீங்கள் இலகுவில் ஆங்கிலம் கதைக்க இயலுமாய் இருக்கும்.
58. நாங்கள் நிறைய பொதிகளுடன் நெடுந்தூரம் நடந்து சென்றோம்.
59. நாங்கள் இரண்டு கிழமைகளில் சிங்கப்பூர் போவோம்.
60. பேருந்து வேகமாக போய்க்கொண்டிருக்கிறது.
61. அவர்கள் அவர்களுடைய மாட்டை நேற்று தொலைத்துவிட்டார்கள்.
62. யாழ்ப்பாண பேருந்து போய் இருக்ககூடும்.
63. அவர்கள் அந்த பேருந்தை சிலவேளை பிடித்திருக்கலாம்.
64. ராஜா தினமும் பூனைக்கு பால் ஊட்டுவது வழக்கம்.
65. நான் எப்படி அங்கே போனேன் என்று தெரியவில்லை.
66. நான் அதை எங்கே தொலைத்தேன் என்று தெரியவில்லை.
67. நான் எப்போது லண்டன் போகலாம்.
68. உனக்கு எப்பொழுது அங்கு வர இயலுமாய் இருக்கும்.
69. நான் நாளை என்ன நேரம் போக இயலுமாய் இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. அவள் எப்படி அங்கே போக முடிந்தது.
71. அவன் எப்படி அவளை சந்திக்க இயலுமாய் இருந்தது.
72. நான் இந்த குப்பைகளை எங்கே போட வேண்டும்.
73. அவன் இவைகளை எங்கே எடுத்து செல்ல வேண்டும்.
74. அவன் நாளை எங்கே போகக்கூடும்.
75. அவர்கள் ஏன் அதை அப்படிசெய்ய வேண்டும்.
76. அவன் எப்படி அதை உடைக்கமுடியும்.
77. அவன் நாளை என்ன நேரம் போக வேண்டும்.
78. அவர்கள் நாளை எப்படி வர முடியும்.
79. நான் நேற்று சோறு சாப்பிட இயலுமாய் இருந்தது.
80. பூனை இன்று அந்த எலியை பிடிக்கும்

## பயிற்சி 3

கீழே உள்ள ஒவ்வொரு வசனங்களையும் அவற்றின் அர்த்தத்தையும் எழுதி அவற்றின் கீழே அந்த வசனம் தொடர்புடைய உங்கள் சொந்த ஆங்கில வசனம் ஒவ்வொன்று எழுதி அவற்றின் தமிழ் அர்த்தங்களையும் எழுதுக?

1. I think he is polishing it. நான் நினைக்கிறேன் அவன் அதை மினுக்குகிறான்
2. My mother chose this என்னுடைய தாய் இதனை தெரிவு செய்தாள்.
3. I have been to the dentist. நான் பல்வைத்தியரிடம் இருந்து இருக்கிறேன்
4. Have you ever eaten rice? நீ எப்போதாவது சோறு சாப்பிட்டு இருக்கிறாயா?
5. Have you found the keys? நீ திறப்புகளை கண்டாயா?
6. Have you planted your plants? நீ உன்னுடைய செடிகளை நாட்டி இருக்கிறாயா?
7. Did you have a good job? நீங்கள் நல்லதொரு வேலை பெற்றதுண்டா?
8. I have not done any job நான் எந்த வேலையும் செய்திருக்கவில்லை
9. That door is open அந்த கதவு திறந்து இருக்கிறது
10. I will go again next year நான் திரும்பவும் அடுத்த வருடம் போவேன்.
11. He will not forget to come அவன் வருவதற்கு மறக்க மாட்டான்
12. We've hired a car. நாங்கள் ஒரு காரை வாடகைக்குஅமர்த்தி இருக்கிறோம்
13. What is it? அது என்ன?
14. Can you sign here, please? தயவு செய்து இங்கே கையொப்பம் இட முடியுமா?
15. I will see you again நான் உங்களை திரும்பவும் பார்க்கிறேன்
16. Don't ring her up அவளுக்கு தொலைபேசி எடுக்கவேண்டாம்.
17. Raja will take you home ராஜா உங்களை வீட்டுக்கு கொண்டுபோவான்
18. He will catch them for you அவன் அவைகளை உனக்காக பிடிப்பான்.
19. They were very rude அவர்கள் மிகவும் மிருகத்தனமாய் இருந்தார்கள்
20. Do you have pen?, நீ பேனா வைத்திருக்கிறாயா?
21. Will you stop cigarette? நீ சிகரெட்டை நிறுத்துவாயா?
22. Shall we wait till the end? நாங்கள் முடியும் வரை காத்திருப்போமா?
23. He'd have missed the train. அவன் புகையிரதத்தை தவறவிட்டிருப்பான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. I was advised not to go. நான் போகாதபடி அறிவுறுத்தப்பட்டு இருந்தேன்
25. It didn't reach the window அது ஜன்னலை அடையவில்லை.
26. He did not speak much அவன் அதிகம் கதைக்கவில்லை
27. He told lies to the police அவன் பொலிசிற்கு பொய் சொன்னான்.
28. I was not able to move நான் நகர இயலாமல் இருந்தது
29. The parcel is very big. இந்த பொதி மிகவும் பெரியது
30. He never listens to anyone அவன் ஒருபோதும் யாரையும் கவனிப்பதில்லை
31. I want a kitchen to cook நான் சமைப்பதற்கு ஒரு சமையலறை வேண்டும்
32. Someone must have told him யாராவது அவனுக்கு சொல்லி இருக்க வேண்டும்.
33. He did not have to retire அவன் ஓய்வெடுக்க வேண்டி இருக்கவில்லை
34. He worked faster அவன் வேகமாக வேலைசெய்தான்
35. He asks me the time அவன் என்னிடம் நேரத்தை கேட்கிறான்
36. I can hear the bell ringing, நான் மணி அடிப்பதை கேட்க முடிகிறது
37. You will remember this day நீ இந்த நாளை ஞாபகமாய்வைத்து இருப்பாய்
38. I didn't like to sit down. நான் கீழே அமர விரும்பவில்லை.
39. The pages were cut அந்த பக்கங்கள் வெட்டப்பட்டு இருந்தன
40. He opened the lion's cage அவன் சிங்கத்தின் கூட்டினை திறந்தான்.
41. He lost his bag அவன் அவனுடைய பையை தொலைத்தான்
42. They employed a staff அவர்கள் ஒரு அலுவலரை நியமித்தார்கள்
43. I want to buy an aeroplane நான் ஒரு விமானம் வாங்க விரும்புகிறேன்
44. The cloths may catch fire அந்த ஆடைகள் தீ பிடிக்கலாம்
45. They caught fish அவர்கள் மீன் பிடித்தார்கள்
46. I try to lose weight. நான் எடையை குறைக்க முயற்சி செய்கிறேன்.
47. What is the name of the girl அந்த பெண்ணின் பெயர் என்ன?
48. I have a cup of milk நான் ஒரு கிண்ணம் பால் வைத்திருக்கிறேன்
49. I think you're getting flu நான் நினைக்கிறேன் உனக்கு காய்ச்சல் வருகிறது
50. Man is also an animal. மனிதனும் ஒரு மிருகம்.
51. Darkness doesn't worry cats, பூனைகள் இருட்டுக்கு பயப்படுவதில்லை
52. Shall we take the car? நாங்கள் காரை எடுப்போமா?
53. They could play the guitar அவர்கள் கிற்றார் வாசிக்க முடிந்தது
54. We're seeing Mary நாங்கள் மேரியை பார்த்துக்கொண்டு இருக்கிறோம்
55. There is enough salt in it அதில் போதுமான உப்பு இருக்கிறது
56. He had a business there அவன் அங்கே ஒரு வியாபாரம் வைத்திருந்தான்
57. You had painted your house நீ உன்னுடைய வீட்டை வர்ணம்தீட்டி இருந்தாய்
58. Do you see any difference? நீ ஏதாவது வித்தியாசத்தை பார்க்கிறாயா?
59. I don't dare to touch it., நான் அதனை தொட துணியவில்லை
60. Was that Anu on the phone? அனுவா போனில் இருந்தான்?
61. He couldn't understand அவன் புரிந்துகொள்ள முடியவில்லை
62. You don't have to pay tax நீங்கள் வரி செலுத்த தேவை இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. They used to have a parrot அவர்கள் ஒரு கிளி வைத்திருப்பது வழக்கம்
64. The fog is getting thicker உறைபனி அடர்த்தியாக வந்துகொண்டிருக்கிறது.
65. They couldn't pay the rent அவர்கள் வாடகை செலுத்த முடியவில்லை.
66. It didn't matter very much இது மிக பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை
67. She's got lovely blue eyes அவள் அழகான நீல கண்கள் வைத்திருக்கிறாள்.
68. You'd better wait for Ravi நீ ரவிக்காக காத்திருப்பது நல்லது
69. She buys food அவள் உணவு வாங்குகிறாள்
70. Guide dogs can come in வழிகாட்டி நாய்கள் உள்ளே வரமுடியும்.
71. There should be another 's' அங்கே இன்னொரு 's' இருக்க வேண்டும்.
72. There's a speed limit here இங்கே ஒரு வேகத்தடை இருக்கிறது
73. Have you got children? உனக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா?
74. The shirts are too long சட்டைகள் மிகவும் நீளமாக இருக்கின்றன
75. How far is it to Jaffna? யாழ்ப்பாணத்துக்கு எவ்வளவு தூரம்?
76. It is impossible to escape இது தப்புவதற்கு சாத்தியமில்லை
77. I could not go to movie. நான் படத்துக்கு போக முடியவில்லை
78. He said that it might rain. மழை பெய்யக் கூடும் என்று அவன் சொன்னான்.
79. May I borrow your umbrella? நான் உங்கள் குடையை இரவல் வாங்கலாமா
80. I practise once a week. நான் கிழமையில் ஒரு முறை பயிற்சி செய்கிறேன்
81. He always replies promptly அவன் எப்போதும் நேர்த்தியாக பதிலளிக்கிறான்
82. He goes everywhere on foot அவன் எல்லாஇடமும் நடந்தே போகிறான்.
83. He does not drive a car அவன் கார் ஓட்டுவதில்லை
84. She does not like flowers. அவள் பூக்களை விரும்பவில்லை.
85. She calls her friend. அவள் அவளுடைய நண்பியை கூப்பிடுகிறாள்
86. We are hurrying to school. நாங்கள் பாடசாலைக்கு விரைந்துகொண்டுகிறோம்.
87. She asks us to do it. , அவள் அதை செய்வதற்கு எங்களை கேட்கிறாள்
88. He is solving the problem. அவன் பிரச்சினையை தீர்த்துக் கொண்டு இருக்கிறான்.
89. It is going away அது அப்பால் போய்க்கொண்டிருக்கிறது
90. They will win the game. அவர்கள் போட்டியை வெல்வார்கள்
91. You do not feed ducks நீங்கள் வாத்துகளுக்கு சாப்பாடு போடுவதில்லை
92. We wash cloths நாங்கள் உடுப்புகள் தோய்க்கிறோம்
93. We are studying now. நாங்கள் இப்பொழுது படித்துக்கொண்டிருக்கிறோம்
94. Are you carrying a parcel? , நீங்கள் ஒரு பொதி கொண்டுபோகிறீர்களா?
95. I learn English. நான் ஆங்கிலம் கற்கிறேன்
96. He is not drinking coffee அவன் கோப்பி குடித்துக்கொண்டிருக்கவில்லை
97. We do not buy pencil. நாங்கள் பென்சில் வாங்கவில்லை.
98. I am learning English நான் ஆங்கிலம் கற்றுக்கொண்டிருக்கிறேன்
99. They have asked a bread அவர்கள் ஒரு பாண் கேட்டு இருக்கிறாகள்.
100. I have cut the blue cloth. நான் அந்த நீல துணியை வெட்டி இருக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**Psalm Institute of Engineering and Technology**
A Division of Psalms Technologies (Pvt) Ltd,
22-1/4, Galle Road, Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org